REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2020 ஒக்டோபர் 27 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 88 இல. 255 | October 27, Tuesday, 2020 | 32பக்கங்கள் | 30/-




# கொரோனா வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை 7875 ஆக உயர்வு

## 3803 பேர் குணமடைவு என சுகாதார அமைச்சு தகவல்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 7875ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்றுவரை 3803 வைரஸ் தொற்று நோயாளிகள் பூரணமாக குணமடைந்து ஆஸ்பத்திரிகளில் இருந்து வீடு திரும்பியுள்ளதாகவும் மேலும் 4054 பேர் பல்வேறு வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்று முன்தினம் கொரோனா வைரஸ் தொற்று 16ஆவது நோயாளி உயிரிழந்துள்ளார். அவர் கொழும்பு இரண்டைச் சேர்ந்தவர் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நேற்றையதினம் முற்பகல் வரை மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை கொத்தணியுடன் தொடர்புடையவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 400 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர்களில் 1041 பேர் ஆடைத் தொழிற்சாலையில் பணி புரிவோர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் பிரபுக்கள் பாதுகாப்பு சேவையில் பணியாற்றும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் 10 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ராஜகிரிய, களனி மற்றும் களுபோவில பகுதிகளில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

06



உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகமான திருப்பீடத்தின் தூதுவர் பேராயர் Brian Ngozi Udaigwe இற்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையே நேற்று (2020.10.26) நடைபெற்ற சந்திப்பின் போது. இலங்கை அரசாங்கத்திற்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையிலான சிறந்த ஒத்துழைப்பு குறித்து பேராயர் பாராட்டுக்களை தெரிவித்தார்.

# நான்கு வருடங்களுக்கு புதிய அரசியலமைப்பு சட்டத்திற்கு இணங்கவே அரசின் செயற்பாடுகள்



## சபாநாயகர் கையொப்பமிட்டதும் 20 வது திருத்தம் சட்டமாகும் என்கிறார் ஜீ. எல். பீரீஸ்

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டதால் 2/3 பெரும்பான்மையுடன் 20 வது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நான்கு வருடங்களுக்கு அரசாங்கம் அதற்கேற்பவே செயற்படும் என அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றைய தினம் அதன் தலைமையகத்தில் இடம்பெற்றது. இங்கு மேலும் தெரிவித்த அமைச்சர் ...

அவர் கையொப்பமிட்டதும் 20வது அரசியலமைப்பு திருத்தம் சட்டமாக்கப்படும்.

அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை. உச்ச நீதிமன்றம் ... வைத்த மூன்று திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அரசாங்கத்தின் ஒற்றுமை தெளிவாகப் புலப்படுகிறது. அதுதொடர்பில் பல்வேறு பிரசா... ...டுக்கப்பட்டு வரு... ...யுள்ள பெரும் ... தெரிவித்தனர். ... கருத்துக்களை

06

# அமெரிக்க இராஜாங்க செயலாளர் பொம்பியோ இன்று இலங்கை வருகை



அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஆர். பொம்பியோ இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று (27) இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, இலங்கை ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோருடன் பொம்பியோ அதிகாரபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

06

# இலங்கையில் 16ஆவது கொவிட் நோயாளி மரணம்

## திங்கள் அதிகாலை கொழும்பில் சம்பவம்

இலங்கையில் 16ஆவது கொவிட் நோயாளியின் மரணம் நேற்று இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் (25) அதிகாலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்த நோயாளி கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளி என உறுதி செய்யப்பட்டுள்ளதாக பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மரணமான இந்த நோயாளி 70 வயது ஆண் ஆவார். அத்தோடு கொழும்பு 02 பகுதியைச்

06




# 64 பொலிஸ் நிர்வாக பிரதேசங்களில் தனிமைப் படுத்தலுக்கான ஊரடங்குச் சட்டம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண

லோரன்ஸ் செல்வநாயகம்



கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக நாட்டின் 64 பொலிஸ் நிர்வாகப் பிரதேசங்களில் தனிமைப்படுத்தலுக்கான ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதே வேளை, மறு அறிவித்தல் வரை தொடர்ச்சியாக தனிமைப்படுத்தலுக்கான ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் நேற்றைய தினம் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 14 மணித்தியால கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

06



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக சமன் தர்சன பாண்டிகோராளவை நேற்று தமது கடமைகளை மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றார்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த இவர், 2013.09.13 தொடக்கம்

06

# பொம்பியோ வருகைக்கும் MCC ஒப்பந்தத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை

## எக்காரணத்திற்காகவும் இது கைச்சாத்தாகாது செஹான் சேமசிங்க



அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோவின் வருகைக்கும் எம்.சி.சி ஒப்பந்தத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

எம்.சி.சி ஒப்பந்தம் தேசிய பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே எக்காரணிகளுக்காகவும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படமாட்டாது என தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் இறையாண்மையினை கேள்விக்குள்ளாக்கி கடந்த அரசாங்கம் அமெரிக்காவுடன் எம்.சி.சி ஒப்பந்த ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, இறையாண்மை

06

# நஸீர் எம்.பிக்கு உலமா கட்சியினர் நேரில் பாராட்டு



20வது திருத்தச் சட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரசின் நேரடி பிரதிநிதியாக இருந்த நிலையில் அதற்கு ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர்

06



# அரசாங்கம் வலுவானதொரு நிர்வாகத்தை முன்னெடுக்க வழியமைத்த 20ஆவது திருத்தம்

## அரச இயந்திரம் சிறப்பாக இயங்க முடியும் என்கிறார் அலி சப்ரி

சில்மியா யூசுப்



அரசாங்கத்திற்கு வலுவானதொரு நிர்வாகத்தை முன்னெடுக்க 20 வது திருத்தம் வழியமைத்துள்ளது. இதனால் அரச இயந்திரத்தை சிறப்பாக இயங்க வைக்க முடியும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தேர்தல்கள், பொது சேவை, மனித உரிமைகள் மற்றும் ஊழல் விசாரணைக்கு பொறுப்பான சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களையும், அமைச்சர்களையும் ஜனாதிபதிக்கு நியமிக்கவும் பதவி நீக்கம்

06

கடற்றொழிலாளர் சமூகத்திற்கு டக்ளஸ் பாதுகாப்பு;

# அசாதாரண சூழலில் மீனவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



## மீன்களை களஞ்சியப்படுத்தல், பதனிடுதல் பற்றி அறிவூட்டல்

கொவிட் 19 காரணமாக கடற்றொழில் செயற்பாடுகள் சீரற்ற நிலையில் காணப்படுவதனால் கரைக்கு கொண்டுவரப்படுகின்ற மீன்களை களஞ்சிப்படுத்தல், கருவாடு பதனிடுதல் மற்றும் டின்மீன் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு சம்மந்தப்பட்ட தரப்பினர்

06

உயர்நீதிமன்ற மேன்முறையீட்டு